மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

141—

குடமுழுக்கு

***41093—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூரிலுள்ள அருள்மிகு கோட்டை பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், அருள்மிகு கோட்டை பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலில் போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் பங்களிப்புடனும், உபயதாரர்களைக் கொண்டும் விரைவில் திருப்பணி வேலைகளை முடித்து, குடமுழுக்கு செய்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. ரா. சரத்குமார் மற்றும் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

142—